**ஹட்டன் - திக்ஓயா நகர சபை**
**நுவரஎலிய மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஜூன் 03 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 19 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹட்டன் - திக்ஓயா நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டிற்காக நகர சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களுடன் அக் கணக்குகள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 62,252,871 தொகையாகக் காணப்பட்டதுடன், துணைப் பதிவேடுகளின் படி, அக்கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 69,938,159 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 7,685,288 தொகைக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

பெறவேண்டியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,411,041 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,017,382 ஆகக் காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

செலுத்த வேண்டியிருந்த 04 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 60,155,337 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை விஞ்சியுள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 57,081,803 ஆகக் காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்த ரூபா 6,820,426 தொகை பெறுமதியான 02 கணக்கு விடயங்கள் பண்ட மதிப்பீடுகள் மற்றும் கணிப்பீட்டு சபை அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு/ உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்ககள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) 371(5) ஆம் பிரிவு | 1990 முதல் 2005 வரை 90 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 4,893,813 தொகை பெறுமதியான முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 571 | 2007 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை 618 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 6,073,453 தொகை பெறுமதியான வைப்புக்களை ஆதனவழிப்பு செய்திருக்கவில்லை. |
| (ஆ) உள்ளூராட்சி ஆணையாரின் 1980 திசெம்பர் 31 திகதியில் 46 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான கடைகள் 2006 ஆம் ஆண்டின் பின்னர் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வாடகையை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 27,911,167 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 15,765,173 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 12,145,994 தொகையினால் முன்னேற்றமொன்று காணப்பட்டது.

### 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

நடைமுறை விகிதாசாரம் 1.3:1 ஆக உச்ச மட்டத்தை விட குறைவாக காணப்பட்டதுடன் நடைமுறை சொத்துக்களில் 34 சதவீதம் கடன்பட்டோரினாலும் மற்றும் நடைமுறை சொத்துக்களின் 57 சதவீதம் கடன்கொடுத்தோரினாலும் அடங்கியிருந்தது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| வருமான விடயம் | 2015.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | 2015.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவையில் அறவீடு | 2015 ஆண்டின் போது சிட்டையிடல் | ஆண்டின் போது சிட்டையிட் டவைகளில் அறவீடுகள் | 2015.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2015.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்து | ஆண்டின் போது சிட்டையிட்ட வைகளில் | மொத்த நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 2,616,427 | 1,227,468 | 7,182,298 | 5,982,763 | 1,388,959 | 1,199,535 | 2,588,494 |
| வாடகை | 3,983,773 | 2,584,626 | 14,754,640 | 13,347,828 | 1,399,147 | 1,766,812 | 3,165,959 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 105,250 | 96,250 | 2,000,956 | 1,941,946 | 9,000 | 59,010 | 68,010 |

**2.3.2 வீத வரி**

(அ) வீத வரி அறவீடு செய்யவதற்காக சபையின் ஆதனங்களை 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனினும் 2006 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டின் மீது 2015 ஆண்டின் போதும் வீத வரி அறவிடப்பட்டிருந்தது. புதிய ஆதன பெறுமதி மதிப்பீடு 2014 செப்தெம்பர் அளவில் சபைக்கு கிடைத்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது செயற்படுத்தாமையால் சபை பாரிய வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

(ஆ) வருட இறுதியில் காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 2,616,427 ஆகக் காணப்பட்டதுடன் அத் தொகையில் ஆண்டின் போது 47 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. மீதி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்டநடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.3 வாடகை**

**(அ) நிலுவை இறைச்சிக் கடை வாடகை**

(i) சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையில் காணப்படும் 09 இறைச்சிக் கடைகளில் இருந்து 1993 ஆண்டு முதல் 2009 ஆண்டு வரையான காலப் பகுதிக்காக நிலுவைக் கடை வாடகை ரூபா 555,421 தொகையினை அறவீடு செய்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இத் தொகையினை அறவீடு செய்வதற்காக சட்டநடவடிக்கை எடுக்கக் கூடிய காலம் முடிவடைய முன்னர் பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் இது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(ii) பொதுச் சந்தையில் 13 ஆம் இலக்க இறைச்சிக் கடை 2015 ஆண்டிற்கான கேள்விகோரும் போது ஏற்பட்டிருந்த முறைகேடு காரணமாக கூடிய கூறுவிலை சமர்ப்பித்து இரத்து செய்யப்பட்ட கேள்விதாரர் சபைக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுத்திருந்ததுடன் இந்த கடைக்காக முறைப்பாட்டுதாரர் சமர்ப்பித்திருந்த கேள்விப்பத்திரத்தினை 2014 ஏப்ரல் 07 ஆம் திகதி முதல்

ஏற்றுக்கொள்ளும் படி நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது. அந்த வழக்கிற்கான வழக்கு கட்டணம் ரூபா 250,000 தொகையொன்று செலுத்தியிருந்ததுடன் 2015 ஜனவரி-மார்ச் வரை ரூபா 931,387 தொகையான வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

**(ஆ) மீன் விற்பனை நிலைய வாடகை**

(i) ஹட்டன் புது சந்தைக்கு முன்னர் காணப்படும் 08 மீன் விற்பனை நிலையங்கள் 2014 ஜூலை 01 முதல் 2015 ஜூன் 30 திகதி வரையான காலப் பகுதிக்காக வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. இந்த கடைகளில் இருந்து வாடகை அறவீடுகள் மிகவும் பலவீன நிலையில் காணப்பட்டதுடன் 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 442,661 தொகையொன்று நிலுவையாகக் காணப்பட்டது.

(ii) இக் கடைகளின் கேள்விக் காலம் 2015 ஜூலை முதல் முடிவடைந்திருந்த போதிலும் செப்தெம்பர் 25 திகதி வரை திரும்பவும் வாடகைக்குக் கொடுப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

இவற்றில் 02 கடைகள் பணம் செலுத்தாமையால் கேள்விகளை இரத்து செய்து மூடப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஜூலை 30 வரை சபைக்கு வருமானம் ஏதும் கிடைத்திருக்கவில்லை.

**(இ) எம்.எச்.எஸ். அபுசாலி மண்டபத்தை வாடகைக்கு கொடுத்தல்**

2013 அக்தோபர் 01 திகதி முதல் 03 வருடங்களுக்கு வாடகைக்கு கொடுத்திருந்த இந்த மண்டபம் 2015 ஆண்டின் போது திரும்பி ஏற்றிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 338,888 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(ஈ) காணிக் குத்தகை**

சபைக்குச் சொந்தமான காணிகளை குத்தகைக்கு கொடுத்திருந்த திகதிகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு குத்தகை தொகையினை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.4 விளம்பரப் பலகை கட்டணம்

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் விளம்பர அறிவித்தல் பலகைகளில் இருந்து கட்டணம் அறவிடுவதற்காக துணை விதியொன்று ஆக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரித்திருக்காத போதிலும் வருடாந்தக் கட்டணம் அறவிடப்படும் என வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இது சபைக்கு பாரிய வருமானம் ஒன்றினை பெற்றுக்கொள்ளக்கூடிய வழியொன்றாகினும் அதன் மீது போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன் அது தொடர்பாக பின்வரும் குறைபாடுகளும் காணப்பட்டன.

(அ) வருட ஆரம்பத்தில் விளம்பர அறிவித்தல் பலகைகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு முறைப்படி ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஜூன் 11 ஆந் திகதி விளம்பரப் பலகை கட்டணம் செலுத்தும் படி 11 நிறுவனங்களுக்கு கடிதங்களை அனுப்பியிருந்த போதிலும், இது தொடர்பாக ரூபா 404,024 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2015 திசெமப்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 190,251 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 8,841,450 என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4 மிகை விதிப்புக்கள்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 182(1) இன் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மிகை விதிப்புக்களின் பெறுமதி ரூபா 29,692 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை மதிப்பீடு

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க உறுதிப்படுத்துவதற்காக பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றுகைகளை காட்டுகின்ற முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் நிருவாக அறிக்கைகள் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 10,316,121 தொகையான வழங்கல்கள் தொடர்பாக பெறுமதி 2016 ஜூன் வரையும் வாக்குப்படி பேரேட்டில் பதியப்பட்டிருக்காததுடன் இதன் காரணம் வாக்குப்படி பேரேடு பேணப்படுவதன் குறிக்கோள் நிறைவேற்றப்படவில்லை.

(ஆ) 2015 ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பண்டக் கணிப்பீட்டின் போது 800ஐ அண்மித்த எண்ணிக்கையான பண்டங்கள் பயன்படுத்த முடியாதவை என இனங்கண்டிருந்த போதிலும் அவற்றை ஏல விற்பனையில் விற்பனை செய்வதற்கு அல்லது வேறு நடைமுறை எதனையும் கடைபிடிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

2012 ஆண்டிற்கு முன்னர் இருந்து சபையில் அதிகாரப் பிரதேசத்தில் சேகரமாகும் திண்மக் கழிவுப் பொருட்கள் மகாவலி கங்கை நீர் போஷிக்கும் இரு ஓடைகளிடையில் காணப்படும் ஒரு தரைப்பகுதிக்கு குவிக்கப்பட்டிருந்த காரணத்தினால் குறிப்பிட்ட நீர் போஷிக்கும் பகுதி அசுத்தமைந்திருந்ததுடன் திறந்த தரைப்பகுதியில் திண்ம கழிவுப் பொருட்கள் தீ வைத்தல் நேரிடுவதால் சுற்றாடல் மாசடைவதற்கு காரணமாகியிருந்தது. இதன் காணரமாக பாதிக்கப்பட்ட கிராமவாசிகளினால் இதற்கு எதிராக ஹட்டன் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது முறையான குப்பைகள் அகற்றும் நடையொன்றினை கடைபிடிக்காமல் தொடர்நதும் அதே இடத்திற்கு குப்பைகள் கொட்டப்படுகின்றன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 06 வருமான விடயங்களில் 13 சதவீதம் முதல் 107 சதவீதம் வரையும் 05 செலவு

விடயங்களில் 42 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பெறுகைகள் திட்டம்

கொள்வனவுகள் மற்றும் நிர்மாண வேலைகள் தொடர்பாக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தினால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

(அ) சபைக்குச் சொந்தமான ரூபா 1,000,000 தொகை பெறுமதியான பாதை தகர்க்கும் இயந்திரம் மற்றும் ரூபா 8,160 பெறுமதியான டிரக்டர் டேலரும் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) பண்டக் கணிப்பீட்டின் போது அகற்றுவதற்கு விதந்துரைக்கப்பட்டிருந்த ரூபா 154,830 பெறுமதியான 113 வகையான கழிவுத் துண்டுகள் ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் 2010 ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் ஏல விற்பனை நடைபெற்றிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான நிருவாகம்
(ஆ) சொத்துக்கள் நிருவாகம்
(இ) கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு